நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.1/2017

2018ம் ஆண்டு மே திங்கள் 10ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 5வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: விமலா வயது: 35

த/பெ.(அ)க.பெ: அருணாசலம் தொழில்: கூலி

ஊர் : ஆண்டியப்பனூர் சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி: -

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் ஆண்டியப்பனூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் அனைவரையும் தெரியும். பக்கத்து ஊரை சார்ந்தவர்கள். எனது வீட்டிற்கு பின்னால் ஏரி புறம்போக்கு நிலம் உள்ளது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 11 மணிக்கு மேல் நான் எனது வீட்டிற்கு பின்னால் இருந்த போது எதிரிகள் அங்கு வந்து சைக்கிள் ஸ்டேண்டு கட்டுவதற்காக எனது வீட்டிற்கு பின்னால் இருந்த ஏரி புறம்போக்கு நிலத்தை ஆக்ரமிப்பு செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு மனோகாரரும், ஆர்.ஐயும் அந்த இடத்திற்கு வந்து அந்த இடத்தை ஆக்ரமிப்பு செய்ய கூடாது என்று சொன்னார்கள். அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. பிறகு அங்கிருந்து எதிரிகள் சென்று விட்டார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

WEB COPY

எ.த.கு.வி:-

எதிரிகள் அனைவரும் பக்கத்து ஊர்காரர்கள் என்பதால் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறிய அனைத்து சங்கதிகளும், போலிஸார் சொல்லி கொடுத்ததன் பேரில் சொல்கிறேன் என்றால் இல்லை. போலீஸார் என்னை விசாரிக்க வில்லை என்றால் விசாரிக்கவில்லை கையெழுத்து மட்டும் வாங்கி சென்றார்கள். எழுதாத பேப்பரில் கையெப்பம் செய்தேனா என்றால் இல்லை பெயர் விவரங்கள் எழுதி சென்றார்கள். சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல கலாட்டா செய்தது உண்மைதான்.

ம.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.1/2017

2018ம் ஆண்டு மே திங்கள் 10ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 6வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: சக்திவேல் வயது: 44

த/பெ.(அ)க.பெ: மாணிக்கம் தொழில்: கோழிகடை

ஊர் : ஆண்டியப்பனூார் சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி: -

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் ஆண்டியப்பனூார் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோழி கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் பக்கத்து ஊர்காரர்கள். சுமார் 1 வருடத்திற்கு முன்பு எங்கள் ஊர் பஸ் ஸ்டாண்டு அருகே வந்து என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 1வது கையொப்பத்தை போட்டேன். அந்த கையெழுத்தை போலீஸார் கேட்டு கொண்டதன் பேரில்போட்டு கொடுத்தேன். வழக்கு விவரங்கள் எனக்கு எதுவும தெரியாது. பார்வை மகஜரில் 1வது கையொப்பம் அ.த.சா.ஆ 6 ஆகும். போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் அனுமதி கோரி வழங்கியதன் அடிப்படையில் அ.த.கு.வி)

என்னுடைய கோழி கடை ஆண்டியப்பனூார் பஸ் ஸடாப் அருகே உ்ளளது. நான் கோழி கடை வைத்துள்ள இடம் புறம்போக்கு நிலம். அதற்கு அருகே தான் எதிரிகள் சைக்கிள் ஸ்டாண்டு போட்டார்களா என்றால் அது ப்றிற என்கக தெரியாது. அது சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலர் அந்த இடத்தை பார்த்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரிடியாது. அது சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலர் வந்து பேசியதால் எதிரிகளுக்கும், கிராம நிர்வாக அலுவலருக்கும் தகராறு ஏற்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலீஸார் இது சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு என் ம்னனிலையில் வரைபடம் வரைந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்ள எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

WEB COPY

எ.த.கு.வி:-

நர்ன எழுதாத வெள்ளை தாளில் தான் கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான்.

ம.வி:- இல்லை.

WEB COPY

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

<u>சி.சி.1/2017</u>

2018ம் ஆண்டு மே திங்கள் 10ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 7வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: சரவணன் வயது: 33

த/பெ.(அ)க.பெ: சுப்பு உடையார் தொழில்: பெட்டிகடை

ஊர் : ஆண்டியப்பனூர் சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி: -

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் ஆண்டியப்பனூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆண்டியப்பனூர் பஸ் ஸ்டாப் அருகே பெட்டிகடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா. 6 சக்திவேல் எனது கடைக்கு அருகே கோழி கடை வைத்திருக்கிறார். நானும், அ.சா.6 ம் அரசு புறம்போக்கு மந்தை வெளி நிலத்தில் கடை வைத்துள்ளோம். ஆஜர் எதிரிகள் அனைவரையும் தெரியும். பக்கத்து ஊரை சார்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் நண்பர்கள். எனது கடைக்கு பின்னால் உள்ள மந்தை வெளி புறம்போக்கில் எதிரிகள் சைக்கிள் ஸ்டாண்டு போட்டது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டதாக கேள்வி பட்டேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இது குறித்து விசாரிப்பதற்காக போலீஸார் வந்த போது கூட்டமாக இருந்தது. நான் அங்கு சென்ற போது போலீஸார் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 2வது கையொப்பத்தை என்னிடம் வாங்கினார்கள். மேற்படி கையெழுத்தை போலீ1ார் எதற்காக வாங்கினார்கள் என்ற விவரம் தெரியாது. போலீஸார் கேட்டு கொண்டதற்கிணங்க போட்டு கொடுத்தேன். அந்த கையெழுத்து அ.த.சா. ஆ 7 ஆகும். போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் அனுமதி கோரி வழங்கியதன் அடிப்படையில் அ.த.கு.வி)

எதிரிகள் சைக்கிள் ஸ்டாண்டு போட்ட இடத்தில் பிரச்சனை ஏற்பட்டதால் அந்த இடத்தை போலீஸார் என் முன்னிலையில் பார்வையிட்டு படம் வரைந்தார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை. எதிரிகள் எனது நண்பர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் ஏ்ன்றால் சரியல்ல.

எ.த.கு.வி:-

நான் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேன் ஏ்னறால் சரிதான். சம்பவ இடத்தை பற்றியோ, சம்பத்தை பற்றியோ நேரடையாக தெரியாது என்றால்

WEB COPY

சரிதான். சைக்கிள் ஸ்டாண்டு போர்டு ஏதாவது இருந்ததா என்றால் இல்லை. எதிரிகள் சைக்கிள் ஸ்டாண்டு வைத்திருந்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் குடியிருக்கும் இடத்திற்கும், சைக்கிள் ஸ்டாண்டு இருந்ததாக சொல்லும் இடத்திற்கும் சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும் எதிரிகளுக்கும், சைக்கிள் ஸ்டாண்டிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை ஏ்ன்றால் சரிதான். போலீஸார் ஏ்ன்னை விசாரிக்கவில்லை கையொப்பம் மட்டும் வாங்கி கொண்டார்கள்.

ம.வி:- இல்லை.

WEB COPY

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

எம்.சி. 3/2017

2018ம் ஆண்டு மே திங்கள் 10ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய ம.த.சா. 1வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: மாலினி வயது:

த/பெ.(அ)க.பெ: அசோக்குமார் தொழில்:

ஊர் : ஜவ்வாதுமலை சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் இம்மனுவின் மனுதாரர். 2ம் மனுதாரர் எனது இளவர் மகன். மனுவை எனக்கும், எனது குழந்தைக்கும்', எதிர்மனுதார் ஜீவானம்சம் வழங்க கோரி தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய சத்திய பிராமண வாக்குமூலத்தை எழுத்து பூர்வமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மனுவுடன் தாக்கல் செய்த ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். எனக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருணமத்திற்கான அழைப்பிதழ் தாக்கல் செய்துள்ளேன். அது ம.த.சா.ஆ 1 ஆகும். என்னுடைய ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) அது ம.த.சா.ஆ 2 ஆகும்.

(மனுதாரர் தரப்பு வேண்டுகோளுகிணங்க கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

WEB COPY

WEB COPY